## பூத்தொடுத்தல்

1.சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

மல்லிகைப் பூவானது மெல்லிய தண்டுகளை உடையது. அது ஆறு இதழ்களைச் சுமக்கிறது. மலரைப் போன்று மென்மைத்தன்மை வாய்ந்த பெண்ணானவள் வேதனையையும் மிக அழகாக மாற்றிக் கொள்ளும் தன்மை உடையவள்.

2. கவிஞர் உமா மகேஸ்வரி பற்றிக் குறிப்பு எழுதுக.

- கவிஞர் உமா மகேஸ்வரி மதுரை மாவட்டத்தில் பிறந்தவர். தற்போது தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியில் வாழ்ந்து வருகிறார்.
- நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை உள்ளிட்ட கவிதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார். கவிதை, சிறுகதை, புதினம் என்று பல தளங்களில் படைத்து வருகிறார்.

3. வாசலில் மரணம் நிற்பதறிந்தும் வருந்தாமல் சிரிக்கும் இந்தப் பூ" என்ற பாடலடிகள் மூலமாக ஆசிரியர் கூறும் கருத்து யாது?

- பூச்செடியில் உள்ள மொட்டுகள் மலரத் தொடங்கும்போதே அதன் முடிவும் தொடங்குகிறது.

- மலர்ந்து மணம் வீசும் மலர்கள் உதிர்ந்து விடலாம் அல்லது காய்ந்து விடலாம் அல்லது மனிதர்கள் பறித்துவிடலாம்.

- எப்படியாயினும் தன் முடிவை அறிந்திருந்தும் கூட அழகாக மலர்ந்து மணம் வீச மலர்கள் மறப்பதுமில்லை; மறுப்பதுமில்லை.

- எத்தகைய துன்பங்கள் நேரிட்டாலும் அதனைத் தயங்காமல் எதிர்கொள்ள வேண்டும். வருத்தத்துடன் நம்மைச் சுருக்கிக் கொள்ளக்கூடாது. இதனையே திருவள்ளுவரும், "இடுக்கண்

வருங்கால் நகுக” அதாவது துன்பம் வரும்போது அதற்காக கலங்காமல் நகுதல் (சிரித்தல்) வேண்டும்.

- துன்பத்தை வெல்வதற்கு அம்மகிழ்ச்சியைப் போல் ஆற்றல் மிக்கது எதுவும் இல்லை என்கிறார்.

4.நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம் பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது ஒப்பிட்டு எழுதுக (Book back)”

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்<br>காம்புகளின் கழுத்து முறியும்.<br>தளரப் பிணைத்தால்<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான் — நவீன கவிதை | கையாலே பூவெடுத்தா – மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா – மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தார்<br>நாட்டுப்புறப் பாடல் |

நவீன கவிதை:

நவீன கவிதையில் பூவினை இறுக்கி முடித்தால் காம்பு அறுந்துவிடும் அதைத் தளரப் பிணைத்தால் தரையில் நழுவும் வாசலில் மரணம் இருப்பது தெரிந்தும் கவலைப்படாமல் சிரித்துக் கொண்டே இருக்கும் பூவைப் போலத் தான் பெண்ணும் வாழ்வில் வரும் பிரச்சனைகளை எதிர்கொண்டு வாழ்க்கையில் மலர்ந்து கொண்டுதான் இருக்கிறாள்.

நாட்டுப்புறப்பாடல்:

நாட்டுப்புறப்பாடலில் இறைவனுக்குப் போடப்போகும் பூவைத் தொடுப்பது எப்படிக் கையால் தொடுத்தால் காம்பு அழுகிப் போகும். விரலால் தொடுத்தால் வெம்பிப் போய்விடும். அதனால் தங்கத்

துரட்டி கொண்டு நான் இறைவனுக்கு மாலையாகத் தொடுக்கிறேன்.

ஒப்பீடு:

புதுக்கவிதையில் தொடுக்கும் பூ மரணத்திற்குப் போடப்படுகிறது. ஆனால் நாட்டுப்புறப் பாடலில் தொடுக்கும் பூ இறைவனுக்குப் போடப்படுகிறது. இருவரும் தொடுக்கும் பூ ஒன்றே. ஆனால் அது போய் சேர்கின்ற இடம் தான் வெவ்வேறாக இருக்கிறது.

5. பூத்தொடுக்கும் பெண்ணின் மனநிலையாக கவிஞர் உமாமகேஸ்வரியின் கருத்துகளை தொகுத்து எழுதுக.

இந்தப் பூவை நான் எப்படித் தொடுப்பேன். இந்தப்பூவின் மெல்லிய தண்டுகள் அமைதியான உலகத்தைச் சுமக்கின்றன. இந்தப்பூவின் மெல்லிய தண்டை இறுக்கி முடிச்சிட்டால் காம்பு அறுந்து முறியும். தளர்ந்து பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும். இவ்வாறு வாசலில் மரணம் நிற்பதை அறிந்தும் வருந்தாமல் சிரிக்கும் இப்பூவை நான் எப்படித் தொடுப்பேன்; ஒரு வேளை என் மனம் மிக நுட்பமாக மாறி நூலாகினால் மட்டுமே இது சாத்தியம் என்கிறார் கவிஞர் உமாமகேஸ்வரி.